# Forum of BSNL Unions / Associations

**தமிழ் மாநிலம்**

# PLI கோரி 19.10.2015 அன்று நாடு தழுவிய தர்ணா...

அன்பார்ந்த தோழர்களே,

BSNL நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதை காரணம் காட்டி கடந்த சில வருடங்களாக நமக்கு போனஸ் கொடுக்க நிர்வாகம் மறுத்து வருகிறது. ஒரு நிறுவனத்தின் லாபத்துடன் PLI வழங்குவதை இணைக்கக்கூடாது என்று DPE வழிகாட்டுதல் இருக்கிறது. இந்த DPE உத்தரவு நகலை நிர்வாகத்திடம் வழங்கினோம். PLI புதிய பார்முலா உருவாக்க அமைக்கப்பட்ட கமிட்டி இன்னும் எந்த ஒரு முடிவையும் எட்டவில்லை. இந்த சூழ்நிலையில் தான் தற்காலிகமாக PLI வழங்க கோரிக்கை விடுத்தோம். **24.09.2015 அன்று நடைபெற்ற Forum கூட்ட முடிவின் படி 06.10.2015 அன்று நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. எனினும் நிர்வாகம் எந்த ஒரு முடிவையும் இன்னும் அறிவிக்கவில்லை.**

**எனவே 12.10.2015 அன்று கூடிய மத்திய Forum 19.10.2015 அன்று நாடுதழுவிய தர்ணா போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது.**

தமிழகத்தில் PLI கோரி நடத்தப்பட இருக்கும் இந்த தர்ணா போராட்டத்தை திட்டமிட்டு சக்தியாக நடத்திட வேண்டும் என்று தமிழக Forum சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

**தோழமையுடன்**

| | |
|---|---|
| R.பட்டாபிராமன் | S. செல்லப்பா |
| Froum தலைவர் | Forum கன்வீனர் |